மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பவியல் நிலையம் சுயேச்சை நிறுவனமாகும். எனவே அரசு இதில் தலையிடுவதற்கில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that a number of grievances of the Madras Institute of Technology have to be redressed? Also is it not a fact that they have submitted a Memorandum and if so, what are the contents of the Memorandum? Also recently there was a move for the State Government to take over the Institute and whether there was any such proposal to take over it?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி, தனியார் துறையில் நடைபெறுவதால் அதிலே நம் தலையீடு இல்லாமல் இருக்கிறது. எந்தக் காரியம் என்னென்ன என்பதுபற்றிய விவரக் குறிப்புகள் இங்கு இல்லை. இப்பொழுதுதான் இந்த நிறுவனத்திற்கு மத்திய அரசும், மாநில அரசும் பொறுப்பேற்று, அண்மையில் 10 நாட்களுக்கு முன்புதான் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்தப் பொறுப்பு, என்கீழ் வந்ததற்குப் பிறகு, வந்திருக்கிற குறைபாடுகளைக் கவனித்து, என்னென்ன செய்ய இயலுமோ அதை இனிமேல் செய்ய முயற்சி செய்யலாம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொழில் தொடர்புள்ள கல்வி.

*371 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டத்தில் "யுனெஸ்கோ" உதவியுடன் தொடங்கும் தொழில் தொடர்பான கல்வித் திட்டம் எப்பொழுது தொடங்கப்படுவதாக உள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் குடியானவர்களுக்குத் தொழில் தொடர்பான முதியோர் கல்வி அளிக்கும் 60 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சேர்ந்தவர்களுக்கு முதல் தொகுதியாக 19—3—1969 முதல் 18—9—1969 வரை ஆறு திங்கள்களுக்கு வகுப்புகள் நடத்தப் பெற்றன. இரண்டாவது தொகுதியாக அவற்றில் சேர்ந்தவர்களுக்கு 20—11—1969 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இராணிப்பேட்டையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

*372 வினா.—**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணிப்பேட்டை நகராட்சி மன்றத்துக்கு தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கட்டடம் விஸ்தரிப்பு, இயந்திரங்கள்